KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.40

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

கலித்தொகை முல்லைக்கலி பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதல்

Bull-Taming in the Cultural Tradition of Mullaikkali in Kalithokai

முனைவர் ரெ.வனிதா[1,*]iD

[1] துறைத்தலைவர், தமிழ்த்துறை, குயின்ஸ் கலை அறிவியல் மகளிர் கல்லூரி, புனல்குளம் புதுக்கோட்டை.

***Corresponding author:** முனைவர் ரெ.வனிதா, natchathravani.@gamil.com

ORCID iD: முனைவர் ரெ.வனிதா https://orcid.org/0009-0001-1657-1399

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 15 October 2026
Accepted: 20 October 2026

Article ID
KIJTS-2026-0015

Peer review
Double-blind peer review

Keywords
Culture
Bull-taming (Erutazhuvuthal)
Mullai landscape
Kalithokai
Morality (Aram)
Valor (Veeram).

ABSTRACT

In Sangam literature, the Mullai landscape (pastoral region) holds a unique and significant place as it portrays the lives of pastoralists, cattle rearing, and a lifestyle harmonized with nature. Bull rearing and its associated valorous sports held a prominent place in the lifestyle of the Mullai region people. Among them, bull-taming (Erutazhuvuthal) stands as an ancient event expressing the valor and culture of the Tamils. Bull-taming is a heroic act of seizing the horns of a bull and attempting to subdue its strength. This was considered not merely a game, but a cultural event that demonstrated the courage, physical strength, and mental fortitude of the pastoral people. References to bull-taming are found in Sangam literary works such as Kalithokai (specifically Mullaikkali), Perumpāṇārruppaṭai, Malaipaṭukaṭām, and Silappatikāram.

In the Mullai landscape, bulls were regarded as familial wealth and a symbol of pride. A warrior's skill in subduing a bull earned him respect in society. Literature also records the celebration of the pastoral community, where women welcomed the warriors by performing the Kuravai dance. Therefore, bull-taming is a vital cultural component that reflects the heroic spirit, nature-oriented lifestyle, cattle-rearing tradition, and social solidarity of Sangam-era Tamils. To this day, it stands as an emblem highlighting the ancient heritage and lifestyle excellence of the Tamils.

How to cite this article: முனைவர் ரெ.வனிதா (2026). கலித்தொகை முல்லைக்கலி பண்பாட்டு மரபில் ஏறுதழுவுதல். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 489–499. https://doi.org/10.63300/kijts603112026.40
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியங்களில் முல்லைத் திணை என்பது ஆயர் வாழ்க்கை, கால்நடை வளர்ப்பு, இயற்கையோடு இணைந்த வாழ்வியல் ஆகியவற்றை எடுத்துரைக்கும் சிறப்பு மிக்க பகுதியாகும். முல்லை நில மக்களின் வாழ்வியல; காளைவளர்ப்பும்,

அதனைச் சார்ந்த வீர விளையாட்டுகளும் முக்கிய இடம் பெற்றிருந்தன. அவற்றுள் ஏறுதழுவுதல் தமிழரின் வீரத்தையும், பண்பாட்டையும் வெளிப்படுத்தும் பழைய நிகழ்வாக அமைகின்றன. ஏறுதழுவுதல் என்பது காளையின் கொம்புகளைப் பற்றிக் கொண்டு அதன் ஆற்றலை அடக்க முயலும் வீரச் செயலாகும். இது வெறும் விளையாட்டாக மட்டுமல்லாமல், ஆயர் மக்களின் துணிவு, உடல் வலிமை, மன உறுதி ஆகியவற்றின் பண்பாட்டு நிகழ்வாகக் கருதப்பட்டது. சங்க இலக்கியங்களான கலித்தொகை முல்லைக்கலி, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் ஏறுதழுவுதல் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. முல்லை நிலத்தில் காளைகள் குடும்பச் செல்வமாகவும் பெருமையின் அடையாளமாகவும் கருதப்பட்டன. காளையை அடக்கும் வீரனின் திறமை சமூகத்தில் மதிப்பை பெற்றது. பெண்கள் குரவை ஆடி வீரர்களை வரவேற்றதும், ஆயர் சமூகத்தின் கொண்டாட்ட வாழ்க்கையும் இலக்கியங்களில் பதிவாகியுள்ளது. எனவே, ஏறுதழுவுதல் என்பது சங்ககாலத் தமிழரின் வீர உணர்வு, இயற்கை சார்ந்த வாழ்க்கை முறை, கால்நடை வளர்ப்பு மரபு, சமூக ஒற்றுமை ஆகியவற்றை வெளிப்படுத்தும் முக்கியமான பண்பாட்டுக் கூறாகும். இது தமிழாpன் தொன்மையான மரபையும் வாழ்வியல் சிறப்பையும் எடுத்துக்காட்டும் அடையாளமாக இன்றும் விளங்குகின்றது.

திறவுச்சொற்கள்

பண்பாடு, ஏறுதழுவுதல், முல்லைத்திணை, கலித்தொகை, அறம், வீரம் ஆகியன ஆகும்.

முன்னுரை

பண்பாடு என்பது ஒரு இனத்தின் வாழ்க்கை முறையையும், சிந்தனை முறையையும் வெளிப்படுத்தும் அடையாளமாகும். மொழி, இலக்கியம், கலை , விழாக்கள், பழக்கவழக்கங்கள், உணவு, உடை, நம்பிக்கைகள் போன்றவற்றின் பண்பாட்டுக் கூறுகளாக விளங்குகின்றன. தமிழர் பண்பாடு உலகின் தொன்மையான பண்பாடுகளில் ஒன்றாகும். சங்க இலக்கியங்கள் தழரின் உயர்ந்த வாழ்வியல் நெறிகளையும், வீர உணர்வுகளையும் எடுத்துரைக்கின்றன. குறிப்பாக, முல்லை நில மக்களின் வாழ்க்கை, ஏறுதழுவுதல் போன்ற வீர விளையாட்டுகள் மூலம் அவர்களின் சமூக வாழ்வும், பண்பாட்டு சிறப்பும் அறியப்படுகின்றன. தமிழர் மரபையும், பெருமையையும் ,பாதுகாக்கும் வகையில் இப்பாண்பாட்டு கூறுகள் இன்றும் போற்றப்படுகின்றன.

பண்பாடு

பண்பாடு என்பது ஒரு இனத்தாரின் அல்லது சமூகத்தாரின் வாழ்க்கை முறையையும், ஒழுக்க நெறிகளையும், பழக்க வழக்கங்களையும், மரபுகளையும், கலைகளையும், நம்பிக்கைகளையும் ஒருங்கிணைந்து வெளிப்படுத்தும் ஒன்றாகும். மனிதன் பிறந்து வளர்ந்து வாழும் காலமெல்லாம் அவன் கடைபிடிக்கும் நல்லொழுக்கம், நடத்தை,

மரபு, விழாக்கள், கலை, இலக்கியம், உணவு, உடை, மொழி போன்றவை அனைத்தும் சேர்த்து ஒரு சமூகத்தின் பண்பாட்டை உருவாக்குகின்றன.

மன்னளின் உள்ளார்ந்த நாகரிகத் தன்மையையும், உயர்ந்த சிந்தனையையும், ஒழுக்க நெறிகளையும், வெளிப்படுத்தும் வாழ்க்கை முறையாகும். ஒரு தலைமுறையிலிருந்து மற்ற தலைமுறைக்கு பரம்பரை வழியாகப் பரவி வரும் வாழ்வியல் முறைகளின் தொகுப்பே "பண்பாடு" எனப்படுகிறது.

தமிழர் பண்பாட்டில் அன்பு, அறம், விருந்தோம்பல், ஒற்றுமை, இயற்கை மரியாதை போன்ற உயர்ந்த பண்புகள் முக்கிய இடம் பெறுகின்றன. தமிழர் கொண்டாடும் விழாக்கள், கடைபிடிக்கும் சடங்குகள், பாடப்படும் பாடல்கள், நடனங்கள், இலக்கியங்கள் ஆகியவை அனைத்தும் தமிழர் பண்பாட்டின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. ஒரு சமூகத்தின் அடையாளத்தையும், உயர்ந்த வாழ்க்கை முறையையும் வெளிப்படுத்தும் பண்பாடாகும்.

பண்பாட்டுக் கூறுகள்

1. மொழி
2. மதம் மற்றும் நம்பிக்கைகள்
3. பழக்கவழக்கங்கள்
4. கலை மற்றும் இலக்கியம்
5. விழாக்கள் மறறும் சடங்குள்
6. உணவு, உடை, மற்றும் வாழ்க்கை முறை

பண்பாட்டு வாயில்கள்

மனிதன் சமுதாயத்தின் அங்கம் ஆவான். அவன் பேசும் மொழி, அணியும் ஆடை, உண்ணும் உணவு, வாழும் முறை, செய்யும் பணி, எண்ணங்கள் ஆகியவை அவன் சார்ந்நத சமுதாயத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தும் வாயில்களாகக் கருதப்படுகின்றன.

தமிழர் பண்பாடு

மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர் தங்களது வாழ்வுக்கும் இலக்கணம் வகுத்தே வாழ்ந்துள்ளனர். இந்த வகையில் உலகில் முதன்மையானதாகவும், சிறந்ததாகவும், தமிழர்களின் பண்பாடு காணப்படுகின்றது. தமிழ் முன்னோர்கள் சிறந்த கலாச்சாரத்தையும், பண்பாட்டு பழக்க வழக்கங்களையும் பின்பற்றி ஆரோக்கியமான ஒழுக்க நெறிகளோடு வாழ்ந்துள்ளனர். தமிழர்களின் முக்கியமான அடையாளங்களில் ஒன்றாக அவர்களுடைய பண்பாடு விளங்குகின்றது.

தமிழர் பண்பாடு என்பது திராவிட நாகரீகத்தின் தொன்மையான அறம் சார்ந்த விழுமியங்களைக் கொண்ட கலாச்சாரமாகும். தமிழ்மொழி, இலக்கியம், விருந்தோம்பல், கலைகள் (நடனம், இசை, சிற்பம்) மற்றும் நிலம் சார்ந்த வாழ்க்கை முறைகள் இதன் அடையாளங்களாகும். காதலும் வீரமும் தமிழர் வாழ்வின் இரு கண்களாகக் கருதப்படுகின்றன. இப்பண்பாட்டு வளர்ச்சியில் பகிர்ந்து கொள்ளல்

என்பது நம் மரபின் சிறப்பு புலவர்கள் வறுமை நிலையில் இருந்தாலும் தாம் பெற்ற பரிசினை மற்றவர்களுக்கும் கொடுத்து தம் சுற்றத்தாரைக் காத்த உயரிய அறத்தைக் கொண்டிருந்தனர். குமண வள்ளலின் பெற்ற செல்வத்தை பெருஞ்சித்திரனார் தன் மனையாளிடம் பிறர்க்கு கொடு என பகிர்ந்ததை புறநானூறு முனைவர் ரெ.வனிதா தனது ஆய்விதலில் கூறுகின்றார்.

தொன்மையும், புதுமையும் கலந்த தமிழர் பண்பாடு விருந்தோம்பல், காதல் மற்றும் வீரத்தை அடிப்படையாகக் கொண்டு உலகெங்கும் பரவி நிலைத்திருக்கின்றன. வந்த விருந்தினரை உபசரித்து அவர்களை வழியனுப்பி வைக்கும்போதே, மேலும், வரக்கூடிய விருந்தினரை ஆவலுடன் எதிர்நோக்கி நிற்பவன் புகழ்வானில் இருக்கின்ற தேவர்களுக்கு விருந்தினனாவான் இதனை,

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு (குறள்.86)

என்ற குறள் வெண்பா வழியாக அறியலாம். இக்குறளில் தமிழரின் விருந்தோம்பல் சிறப்புற்றுக் காணப்படுகிறது.

மலிதிரை ஊர்ந்து தன் மண் கடல் வௌவலின்

மெலிவு இன்றி மேல்சென்று மேலார் நாடு இடம்பட

புலியொடு வில் நீக்கி, புகழ்பொறித்த கிளர்கெண்டை

வலியினான் வணக்கிய, வாடாச்சீர்த் தென்னவன் (கலித்.104 1-4)

என்ற பாடலடிகளில் பாண்டிய மன்னன் வாழ்த்தப் பெறுகிறான். மாற்றரசர்கள் அழிந்து வீழும்படி, அவர்களைக் கொன்று வென்ற பின்னர், முறைப்படி அவர்தம் செல்வங்களைக் கொண்டு வரும் தலைமைச் சிறப்புகளை உடையவன் பாண்டிய மன்னன். அவனுடைய பழமைச் சிறப்புடைய குடிக்கு முத்தும், பிறவும் குறைவின்றி பெருக வேண்டும்.முரசங்கள் முழங்கும்படியான, முதியகுடியிற் பிறந்து, மாறுபாடு மிக்க அச்செல்வன் தீமை ஏதுமின்றி பொலிவானாக! என்று ஆயர்கள் வாழ்த்துவதனை,

அரைசுபடக் கடந்து அட்டு, ஆற்றின் தந்த

முரைசுகெழு முதுகடி முரண்மிகு செல்வற்கு

சீர்மிகு சிறப்பினோன் தொல்குடிக் உரித்துஎனப்

பார்வளர், முத்தமொடு படுகடல் பயந்த

ஆர்கலி உவகையர் ஒருங்கு உடன் கூடி

தீது இன்று பொலிக! (கலித்.105 1-6)

அருந்தலை ஏற்றொடு காதலார்ப் பேணி,

சுரும்பு இமிர் கானம் நாம் பாடினம் பரவுதும்

ஏற்றவர் புலம் கெடத் திறை கொண்டு

மாற்றாரைக் கடக்க, எம்மறம் கெழு கோவே

எனும் அடிகளின் மூலம் மறம் பொருந்திய எம் பாண்டிய மன்னன்! பகைவர் நிலம் என்றும் பெயர் நீங்கித் தன் நிலம் என்றும் பெயர் பெறுமாறு எதிர்த்தவர் நாடு அழிய, அவரை வென்று திறை கொண்டு, பகைவரை என்றும் வெல்வானாக என்று தென்னனவனை ஆய்ச்சியர் போற்றுதலை அறியலாம்.

ஏறுதழுவுதல்

முல்லைநிலம் என்பது காடும் காடு சார்ந்த பகுதியும் என்பதால் அங்கு வாழும் ஆயர்கள் புலி முதலிய கொடிய விலங்குகளிடமிருந்து தம் பசுக்களைக் காக்க வேண்டிய நிலையில் இருந்தனர்.தம் நாட்டின எல்லைப் பகுதி காடு என்பதால் பகைவரின் தாக்குதலுக்கு உட்படுவதும் அப்பகுதியே ஆகும். ஆதலால் நம் நாட்டைப் பாதுகாக்க வீரம் உடையவர்களாக விளங்க வேண்டியிருப்பது இன்றியமையாததாக இருந்தது. எனவே, ஆயர்களும் தன் மகளை மணக்க விரும்பும் ஆடவர்களும் வீரம் மிக்கவர்களாக விளங்க வேண்டும் என எண்ணினர். அதன் காரணமாகவே ஏறுதழுவுதல் நிகழ்ச்சியையும் ஏற்படுத்தினர்.ஏறுதழுவுதல் என்பது சீறிபாயும் காளைகளை தழுவி அடக்குதலாகும். சங்க கால மகளிர் தான் வளர்த்த எருதினை அடக்கும் ஆடவனைத் திருமணம் செய்துள்ளனர் என்பதை முல்லைக்கலிப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

கார்காலம் மழை பொழிந்து ஈரம் பட்டிருக்கும் நிலத்தில் காய்ந்திருந்த பிடவ மலர்கள் பு+க்கத் தொடங்கின. அந்நிலத்தில் காயா, பிடவம் போன்ற மலர்களை மாலையாகக் கட்டிடத் தலையில் அணிந்துக் கொண்டு வீரர்கள் தொழுவத்தில் ஒன்று சேர்ந்துப் புகுந்தனர். அப்படி புகுந்த வீரர்களைக் கொம்பு சீவப்பட்டு நிறுத்தப்பட்டிருந்த எருதுகள் தம் கொம்புகளால் குத்திக் கிழித்து தூக்கி வீசின.

இந்நிகழ்வைக் கண்ட தலைவி தன் தலைவனை எண்ணி வருந்துகின்றாள். தன் தலைவனையும்இப்படி தான மாடு குத்தி கிழ்த்து விடுமோ என்றும் கவலை கொள்கின்றாள். ஆயினும் தன் கழுத்தில் மாலை அணிவிக்கக் கூடிய கணவனைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்த ஏறுதழுவுதல் நடைபெற்றது. தன் தலைவன் ஆண் யானையைக் காட்டிலும் அஞ்சாத வீரம் கொண்டவனாக இருப்பான். அப்படிப்பட்ட அஞ்சாத வீரம் கொண்டவன் அக்காளையை அடக்கிக் தன்னைத் திருமணம் செய்துக் கொள்வான். காளையைப் பிடிப்பதில் தனக்கு ஒப்பானவர் யாரும் இல்லை என்று கூறும் அளவிற்கு பசு கூட்டத்திற்குள் புகுந்து தன் செயல் திறத்தை வெளிப்படுத்தும் ஆயர்குல பொதுவனுக்கு மனையாளாகாமல் விடமாட்டேன். அவனைக் காண்பதற்கு உதவியாகத்தான் என் காளையுடன் என் கண்ணையும் வளர்த்துக் கொண்டிருக்கின்றேன் என்று தலைவி கூறுவதாக அமைந்த முல்லைக்கலிப் பாடலில் தன் தலைவனைத் தேர்ந்தெடுப்பதற்காக ஏறுதழுவுதல் நடத்தப்பட்டிருப்பதை முல்லைக்கலி பாடல்கள் எடுத்துரைக்கின்றன. இதனைக்,

கோளாளர் என் ஒப்பார்இல் என நம் ஆனுள்

தாளாண்மை கூறும் பொதுவன் நமக்கு ஒருநாள்

கேளாளன் ஆகாமை இல்லை அவற் கண்டு

வேளாண்மை செய்தன கண்.(கலித்.101 43-46)

என்று தலைவி கூறுவதன் வாயிலாக தலைவனின் வீரத்தையும், பெண்களின் எதிர்பார்பையும் முல்லைலைக்கலி எடுத்து இயம்புகின்றன. இதன் வாயிலாக அக்கால மக்கள் ஏறுதழுவுதலைத் தன் வாழ்வியல் நெறிமுறைகளில் ஒன்றாக கருதியுள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

கொல் ஏற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்

புல்லாளே ஆய மகள்

அஞ்சார் கொலை ஏறு கொள்பவர் அல்லதை

நெஞ்சிலார் தோய்தற்கு அரிய உயிர்துறந்து

நை வாரா ஆயமகள் தோள். (கலித்.103 63-67)

எனும் அடிகள் கொல்லும் காளையின் கொம்புக்கு அஞ்சுபவனை ஆயர்குலப் பெண் இந்தப் பிறவியில் மட்டுமின்றி மறுபிறவியிலும் தழுவமாட்டாள். கொல்லும் காளையை இஞ்சாமல் பிடித்து ஆள்பவரல்லாதவரை ஆயர்குல மகள் தழுவமாட்டாள். தழுவ நேர்ந்தால் உயிர் துறந்து மாய்வாள் என்பதை முல்லைக் கலிப் பாடல் எடுத்துரைக்கின்றது. இதன் மூலம் பெண்கள் வீர மறவர்களைத் தன் வாழ்க்கைத் துணையாக ஏற்றுள்ளனர் என்பதையும், அத்தகைய சிறந்த இல்லற வாழ்வை மேற்கொண்டிருந்தனர் என்பதையும், ஏறுதழுவுதலை தன் வாழ்வியல் மரபாகக் கொண்டிருந்தனர் என்பதையும் அறிந்துக் கொள்ள இயலுகின்றது.

மாண்புடைய அணிகலன் அணிந்த தலைவியின் பொருட்டு நிகழும் ஏறுதழுவுதலைப் பரந்துப் பட சொல்லுங்கள். இவன் மட்டுமின்றி ஏறுதழுவுவார் பிறர் இருப்பின் வருக என்று பறை அறைக என்று தலைவியின் சுற்றத்தார் கூறுவதனை,

சொல்லுக! பாணியேம் என்றார் அறைக என்றார், பாரித்தார்

மாணிழை ஆறாகச் சாறு (கலித்.102 13-14)

என்ற முல்லைக்கலி தொடர்கள் வழி அறியலாம்.

ஆயர், மணிகளையுடைய மலையினின்றும் வீழும் அருவிபோல அழகின் எல்லை மீறிய வெள்ளிய கால்களையுடைய கரிய ஏற்றினையும், விண்மீன்கள் பு+த்து விளங்கும் வானம் போல வெள்ளிய புள்ளிகள் கொண்ட வெள்ளை ஏற்றினையும், கொலைத் தொழிலுடைய இறைவன் சூடிய திங்கட்பிறை போல் வளைந்த கோட்டினையுடைய சிவந்த ஏற்றினையும், பொருகின்ற மாறுபாட்டினையுடைய பிற ஏறுகள் பலவற்றையும் தொழுவினுள் புகவிட்டனர் என்பதை,

மணிவரை மருங்கின் அருவி போல

அணிவரம்பு அறுத்த வெண்காற் காரியும்,

மீன்புத்து அவிர்வரும் அந்திவான் விசும்புபோல்

வான்பொறி பரந்த புள்ளி வெள்ளையும்

கொலைவன் சூடிய குழவித்திங்கள் போல்

வளையுபு மலிந்த கோடு அணி சேயும்

பொருமுரண் முன்பின் புகல் ஏறு பலபெய்து

என்ற முல்லைக்கலி அடிகள் மூலம் அறியலாம்.

ஆயர்கள் கொம்புகள் சீவப்பட்ட ஏறுகளை ஒருசேரத் தொழுவினுள் புகவிட்டனர். அவ்விடத்தே மழைமுழக்கம் போலவும், இடிமுழக்கம் போலவும், ஆரவாரம் எழ, ஏறுகள் முக்காரமிட்டு நின்றன. ஏறுதழுவியவற்குத் தன்மகளைத் தருவேன் என்ற வழக்கப்படி, காண அனைவரும் வந்து சேர்ந்தனர் என்பதை,

சீறு அரு முன்கினோன் கணிச்சிபோல் கோடு சீஇ,

ஏறு தொழூஉப் புகுந்தனர் இயையுடன் ஒருங்கு

அவ்வழி, முழக்குஎன, இடிஎன, முன் சமைத்து ஆர்ப்ப

வழக்கு மாறு கொண்டு, வருபு வருபு ஈண்டி

நறையொடுதுகள்எழநல்லவர்அணிநிற்ப (கலித்.101 8-2)

என்ற முல்லைக்கலிப் பாடல் புலப்படுத்துகின்றது.

போர்குணமுடைய எருதுகளையும், ஒப்பில்லாத பிறவற்றையும், நிறமுடைய பல மேகங்கள் திரண்டெழுந்து முழங்குவது போல முழங்கும்படி விரும்பி தொழுவிலே புகவிட்டனர் ஆயர்கள். அவ்விடத்திலே இந்த ஒப்பில்லாத வெள்ளை ஏற்றின் கழுத்திலே கிடந்து அடக்குபவன், முள் எயிற்று அழகியான தலைவியைப் பெறுவான் என்பதை,

பொருவரும் பண்பினவ்வையும், பிறவும்

உருவப்பல் கொண்மூக் குழீஇயவை போல,

புரிபு புரிபு புகுந்தனர் தொழூஉ

அவ்வழி, முள் எயிற்று ஏஎர் இவளைப் பெறும், இதுஓர்

வெள்ஏற்று எருத்து அடக்குவான். (கலித்.104 15-19)

என்ற முல்லைக்கலிப் பாடல் உணர்த்தி நிற்கிறது.

ஏறு தழுவியோர் பெறும் பரிசுகளும் வெவ்வேறானவை குறிப்பிடத்தக்கன. ஆயமகளின் கூந்தல் மீது தூங்கப் பெறுதல், தோற் மீது தூங்கப் பெறுதல் போன்ற கிடைத்தற்குரிய பேற்றினை ஏற்றினை அடக்கியோர் பெறுவர்.

பொதுவாக் காளை என்றால் நம் நினைவில் வருவது வீரம், இளமை இவை இரண்டேயாகும்.அதனால் தான் ஒரு ஆண்மகனைச் சுட்டுகையில் "கட்டியங்காளையவன்" என்று ஒப்புமைப்படுத்துவர். உலகளவில் காளை வீரத்தின குறியீடாகக் கருதப்படுகின்றது. கி.மு.2000 ஆண்டுகளுக்கு முன்பே நாகரீகத்திற்கு பெயர் பெற்றவர்களாக எகிப்தியர்கள் மத்தியில் காளைச் சண்டை இடம்பெற்றிருப்பதனை நம்மால் அறிய முடிகிறது.

எகிப்தில் உள்ள பெனி – ஹாசன் சித்திரங்களிலும், கீரிட் தீவிலுள்ள

கினோஸஸ் என்னுமடத்தில் உள்ள அரண்மனைச் சித்திரங்களில்

காளைப்போர் இடம்பெற்றுள்ளது[4](த.ப.வி.,ப.62)

சிந்துசமவெளி நாகரிக வரலாற்றிலும் காளை முக்கியப் பங்கு வகிக்கின்றது. ஆகவே தான் இம்மக்கள் காளையினைத் தெய்வமாக வழிபட்டதனை அகழ்வாய்வில் கிடைக்கப்பெற்ற சான்றுகள் வாயிலாக அறிகின்றோம். இப்படிப்பட்ட சிறப்பினைக் கொண்ட காளையினைக் கொண்டு ஏறுதழுவுதல் சங்ககாலத்தில் நிகழ்த்தப்பட்டிருப்பது சிறப்பான ஒன்றாகும்.

ஏறுதழுவுதல் இடம் பற்றி செய்திகள் பெரும்பாணாற்றுப்படையும் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

மல்லல் மன்றத்து மதவிடை கெண்டி

மடிவாய்த் மண்ணுமை நடுவண் சிலைப்பர்

சிலை நவில எறுழத் தோள் ஒச்சிவ லன் வளையுஉப்

பகல் மகிழ் தூங்கும் தூங்கா இருக்கை

முரண்தலை கழிந்த பின்றை[5](பெரும்பாண். 143 – 147)

என்ற வரிகள் மூலம் கூடியிருக்கும் மன்றத்தில காளைகளைத் தூண்டி விட்டு தண்ணுமை முழக்கத்துடன் ஏறுதழுவுதல் நிகழ்ச்சி நடைபெற்றதை அறிந்து கொள்ள முடிகிறது.

கோவலர்களும் குறவர்களும் ஒருங்கிணைந்து ஏறுதழுவுதலை ரசித்தனர் என்ற செய்தியை,

இனத்திற் றீர்ந்த துளங்கிமி னல்லேறு

மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை

மாறா மைந்தின் ஊறுபடத் தாங்கிக்

கோவலர் குறவரோ டொருங்கியைந்தார்ப்ப[6](மலை.330-333)

என்று கூத்தராற்றுப்படை என்று சிறப்பிக்கப்படும் மலைபடுகடாம் பாடல் வரிகள் விளக்குகின்றன.

ஏழு பெண்களைக் குரவையாட நிறுத்தி அவர்களை ஏறுதழுவக் காளை வளர்த்தவர்கள் என்று கூறி, அந்த ஏழு பெண்களுக்கும் தான் படைத்த பெயர்களை ஆயர் சூட்டினர் என்பதை,

தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார்

எழுவர் இயங் கோதையார்[7](சிலம்பு.17.5)

என்ற சிலப்பதிகாரப் பாடலடிகள் மூலம் அறியலாம். இப்பாடலில், ஏறுதழுவியக் காட்சி சுட்டப்படுகின்றது.

ஏறுதழுவுதலும் தமிழர் அறமும்

இலக்கியத் தொன்மையும், பண்பாட்டுத் தொன்மையும் கொண்டதே தமிழர் வரலாறாகும். இயற்கையுடனும் பிற உயிர்களிடமும் இணைந்தே சங்ககாலத் தமிழர்கள் tாழ்ந்து வந்தனர். இதற்கு சங்க இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று ஏறுதழுவுதல் நிகழ்வு. உலகின் பல பகுதிகளில் எருதுகளை மையமிட்ட நிகழ்வுகள் பல நடைபெறுகின்றன. ஸ்பெயின், மெக்ஸிகோ, போர்ஸிகோ, தெற்குப் பிரான்ஸ் போன்ற நாடுகளில் நடைபெறும் காளைப் போட்டிகள் நம் தமிழக ஏறுதழுவதவிவ் இருந்து முற்றிலும் மாறுபட்ட விநோதமானவையாகும்.

ஏறுதழுவுவோன் சிலரின் உதவியோடு

காளையினை அடக்கிக் கொன்றுவிடுவான்[8](த.ப.வி., ப.67)

அதாவது ஒரு மைதானத்தில் கையில் சிவப்பு நிறத் துணியுடன் வீரனும் வலிமையான காளையும் களமிறங்குவர். காளையிடம் வீரன் தோற்க நேர்ந்தால் அவன் இறக்க நேரிடும். வீரன் வெற்றி பெற்றால் காளையினைக் களத்திலேயே அவன் இறக்க நேரிடும். வீரன் வெற்றி பெற்றால் காளையினைக் களத்திலேயே கொன்று விடுவது இங்கு வாடிக்கை ஆகும். இதனால் உயிர்சேதம் ஏற்படுகின்றது. ஆனால் இதனை இவர்கள் பொருட்படுத்துவதில்லை.இங்கு தான் தமிழரின் உயர்ந்த அறம் போற்றப்படுகின்றது. சங்ககாலத் தமிழர்கள் தோற்றாலும், வென்றாலும் காளைகளைக் கொன்றதான வரலாறில்லை. இதுவே தமிழரின் அறக்கோட்பாடாகும்.

வீரம்

எருதுகள் தாக்குகின்றமையின் அதன் கோடுகள் தம் மார்பிலேபடுதலை ஏற்றுக் கொள்பவரோடும், மேலே பாய்ந்து ஏறுபவரோடும், கோடுகளுக்கிடையே புகுபவரோடும் ஏறுகள் பொருது பின்பு பொருவாரை அறுத்து, செறுத்து நின்றன. விலக்குபவரை மறுத்துச் சென்று மைந்தர் தழுவதரலிகாலே எலும்புகள் முறித்து, தசைகள் சிதறிப் பரவிக் கிடந்தன. இதனை,

ஆங்க, செறுத்து அறுத்து உழக்கி ஏற்று எதிர் நிறப,

மறுத்து மறுத்து மைந்தர் சார

தடிகுறை இறுபு இறுபு தாயின கிடப்ப (கலி.104 21-23)

என்ற முல்லைக்கலி பாடல் அடிகள் வழி அறியலாகும்.

ஏற்றினை அடக்குகின்ற பொதுவர் தொளைபட்ட புண்களிலிருந்து வடியும் குருதிபட்டுக் கைவழுக்குதலினால் மணலை அள்ளிக் கைபிசைந்து, உடம்பைத் திமிர்த்து காலந்தாழ்க்காவர்களாய், கடலுக்குள் பரதவர் சிறுதெப்பம் ஏறுவதைபோல், ஏறுமேற் பாய்ந்து தழுவி அடக்கினர். இதனை,

தொட்டதம், புண்வார் குருதியால் கைபிசைந்து, மெய்திமிரி

தங்கார் பொதுவர் கடலுள் பரதவர்

அம்பி ஊர்ந்தாங்கு ஊர்ந்தார் ஏறு. (கலி. 106 23-25)

எனும் முல்லைக்கலிப் பாடல் வழி அறிய முடிகிறது.

ஏறுகளின் அழகிய மருப்பினால் குத்திச் சரிந்த குடல்களைப் பருந்துகள் பற்றிக்கொண்டு மேலே சென்றன. தவறி விழுந்த குடல்கள் ஆலமரத்தின் மீதும் கடப்ப மரத்தின் மீதும் விழுந்தன. ஆண்டு உறையும் தெய்வங்களுக்கு அணிவிப்பதற்காக இட்டு வைத்த மாலைகள் போல, குடல்கள் கிளைகளிலே தொங்கின. இதனை,

ஏறுதம் கோலம் செய் மருப்பினால் தோண்டிய வரிக்குடர்

ஞாலம் கொண்டு எழூஉம் பருத்தின் வாய் toP,,

ஆலும் கடம்பும் அணிமார் விலங்கிட்ட

மாலைபோல், தூங்கும் சினை[9](கலி.106 26-29)

என்ற முல்லைக்கலி பாடலடிகள் மூலம் உணர முடிகின்றது.

ஏறுகள் தொழுவினுள் புகுந்தமைக்குக் "களம் புகும் மள்ளரை ஒத்தன" ஏறுகள் மெய்யில் குருதி வடிய நின்றமைக்குக் "காளையில் பெய்யும் கொண்டல் ஒத்தன"என்று சுட்டப் பெறுவன.

ஏறுதழுவும் முறையில் பயிற்சி இல்லா வீரனொருவன், புகர்நிறக் காளையைத் தழுவ முயற்சி செய்தான். அதனால் ஏற்றைத் தழுவ இயலாமல் கீழே வீழ்ந்து கிடந்தான். அதனைக் கண்ட அந்த காளை அவனை வதைக்க எண்ணாமல் வேறு பக்கம் சென்றது. அந்தக் காட்சி "தமிழநாட்டுப் போர்களத்தில், தனக்கு தகுதியில்லாத வீரனோடு இன்னொரு வீரன் போரிட மாட்டான்" என்பது போல உள்ளது என்று தோழி கூறுவதை,

தோள் வலி துணி பிணி, துறந்து இறந்து எய்திஈ மெய் சாய்ந்து

கோள் வழுக்கித் தன் முன்னர் வீழ்ந்தான் மேல் செல்லாது

மீளும் புகர் ஏற்றுத் தோற்றம் காண்- மண்டு அமருள்

வாள் அகப் பட்டானை, ஒவ்வான் – எனப் பெயரும்

மீளி மறவனும் போன்ம். (கலி.104 46-50)

என்ற முல்லைக்கலி பாடலடிகள் மூலம் உணர முடிகின்றது.

இந்தக் காட்சியில், தமிழ் மறவரின் போர்த் திறத்தையும், பேராண்மையையும் புலவர் எடுத்துக் காட்டியுள்ளது பாராட்டத்தக்கதாகும். தமிழ்நாட்டு விலங்குகள் கூடத் தன்னிடம் அஞ்சியவனைத் தாக்கும் எண்ணத்தைக் கொள்ளாது என்பது கூறப்பட்டுள்ளது. புறமுதுகிடும் வீரனைத் தூயவீரன் தாக்காதது போல, அந்த ஏறும் உள்ளது எனத் தோழிக்கு தலைவிக்கு கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

மாலை தாழ்ந்து விளங்கிய அழகு மிகுந்த மார்பினையும், முழந்தாள் பொருந்திய பெரிய கைகளையும், அழகின் மாட்சிமையும் உடைய வழுதியே! நீ அருளுடன் அளிப்பதில் வல்லவன் ஆவாய் என்றும் பொய்கூறி அறியாய் பெருமானே! உன் பகைவர்க்கு வெப்பம் நீங்காது, கடலிடத்துத் தோன்றும் ஞாயிறு போன்றவன் ஆயினும் எம் போன்ற நின் அருள் பெற்றவர்க்கு திங்களைப் போன்றவன் என்பதனை,

ஆரம் தாழ்ந்த அணி கிளர் மார்பின்,

தாள் தோய் தடக் கை, தகை மாண் வழுதி!

வல்லை மன்ற, நீ நயந்து அளித்தல்

தேற்றாய் பெரும! பொய்யே என்றும்

காய்சினம் தவிராது கடல் ஊர்பு எழுதரும்

ஞாயிறு அனையை, நின் பகைவர்க்கு

திங்கள் அனையை, எம்மனோர்க்கே[10]

என்ற புறநானூற்றுப் பாடல் வழியாக அறிய முடிகிறது. இப்பாடலில், மன்னனின் சினம், கதிரவனின் வெம்மைக்கு ஒப்பிடப்படுகின்றது. இதன் மூலம் தமிழர்களின் வீரத்தினைப் பற்றி அறிய முடிகிறது.

ஏறுகளின் ஒப்புமை

வானத்தைப் பொருந்தும்படி ஓங்கிய ஒளிவீசும் பனைக் கொடியினையுடைய பால் போன்ற நிறமுடைய பலராமனை போன்ற குற்றம் நீங்கிய வெள்ளை எருது ன்பதனை,

வாள்உற ஓங்கிய வயங்கு ஒளிர் பனைக்கொடிப்

பால்நிற வண்ணன் போல்பழி தீர்த்த வெள்ளையும் (கலி.104 7-8)

என்ற அடிகள் மூலமும், மாறுபாட்டினால் ஏனையவற்றின் மேலான, பொன்னாலாகிய, புகழ் பெற்ற சக்கரப்படையை உடையவனும், திருமகளை மறுவாக் மார்பிலே கொண்டவனுமாகிய மாயோனின் நிறமுடைய கரிய எருது என்பதனை,

பொருமுரண் மேம்பட்ட பொலம் புனைபுகழ் நேமித்

திருமறு மார்பன் போல் திறன் சான்ற காரியும் (கலி.104 9-10)

என்ற அடிகளின் மூலம், உளிமிக்கு தாழ்ந்த சடையினையும், ஒருபக்கத்தே பொருந்திய பிறைபோன்ற நுதலையுடையுடையானையும் கொண்ட

முக்கண்ணாகிய சிவபெருமானின் உருவினை ஒத்த வலிமையுடைய கபிலை நிற எருது என்பதனை,

மிக்கு ஒளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதல்

முக்கணான் உருவே போல் முதண் மிகு குராலும்(கலி.104 11-12)

என்ற அடிகளின் மூலமும், கரிய கடல் கல்கும்படி, மாமரத்தின் வடிவில் நின்ற அசுரனைக் கொன்று புறங்கொடாத வேலினையுடைய வல்லனாய முருகனின் நிறம் போன்ற சிவந்த எருது என்பதனை,

மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காப் போர்

வெல்வலான நிறனே போல் வெருவந்த சேயும்(கலி.104 13-14)

எனும் அடிகளின் மூலமும் ஏறுகளை கடவுளோடு ஒப்பிடுதல் புலப்படுகின்றது.

மூவினம் வளர்த்தல்

எருமை, பசு, ஆடு ஆகிய மூவினத்தை வளர்த்து, அவற்றின் பயன்களால் வாழ்க்கை நடத்தும் ஆயர் மூவகைப்படுவர்.

- கோட்டினத்து ஆயர் – எருமைக் கூட்டத்தை உடையவர்
- கோவினத்து ஆயர் - பசுக் கூட்டத்தை உடையவர்
- புல்லினத்து ஆயர் - ஆடுகளை உடையவர்

மறப் பண்பில் பசுவின ஆயரை விட எருமையின் ஆயரே சிறந்தவர் என்ற கொள்கை ஆயருக்கு உண்டு.

வேத கால ஆரியர் தம் தெய்வங்களுகுக ஆடு, மாடு முதலியவற்றைப் பலியிட்டனர். அவற்றை உண்டனர். சங்ககாலத் தமிழரும் ஊண் உண்டனர். பௌத்தர்கள் ஊண் உண்ணாதவர் இருப்பினும் கொல்லாமையை மட்டும் வற்புறுத்தினர்.

முடிவுரை

கலித்தொகை முல்லைக்கலியில் ஏறுதழுவுதல் என்பது மிகவும் முக்கியமான ஒரு நிகழ்வாக கருதப்படுகின்றது. ஏறுதழுவுதலின் மூலம் சங்ககால மக்களின் வாழ்வியலையும், பண்பாட்டுக் கூறுகளையும் அறிந்துக் கொள்ள முடிகின்றது. மேலும், அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளை நமக்கு சிறந்த பாடத்தை எடுத்துரைக்கின்றன. மேலும், தமிழர் பண்பாட்டில் அறமும், வீரமும் சிறந்த முறையில் வழிநடத்தப்பட்டு ஏறுதழுவுதலின் வழியாக நமக்கு புலப்படுத்துகின்றன.

அடிக்குறிபபுகள்

1. திருக்குறள், கோதண்டம், குறள்.86
2. கலித்தொகை மூலமும் உரையும், புலியுர் கேசிகன், பாடல்.106 46-50
3. மேலது, பாடல்.160 50
4. தமிழர் பண்பாட்டில் விளையாட்டுகள்,சு.பிச்சை,gக்.62

5. பத்துப்பாட்டு பாடலும் பொருளும், (பெரும்பாணாற்றுப்படை) க.த.நீலகண்டன், பக்.143-147.
6. பத்துப்பாட்டு பாடலும் பொருளும், (மலைபடுகடாம்) க.த.நீலகண்டன், பா.333-333
7. சிலப்பதிகாரம், புலியுர் கேசிகன், பா.17.5
8. தமிழர் பண்பாட்டில் விளையாட்டுகள்,சு.பிச்சை,பக்.67.
9. கலித்தொகை மூலமும் உரையும், புலியுர் கேசிகன், பாடல்.26-29.
10. புறநானூறு, கு.வெ.பாலசுப்ரமணியம், நியு செஞ்சுரி புக்ஹவுஸ்,பக்59.7
11. தமிழ் மனம், தமிழகத்த்pல் சமயங்களின் செல்வாக்கு, முனைவர் ரெ.வனிதா, பக்.1638
12. தமிழ் மனம், சங்க இலக்கியங்களில் வறுமைச் சூழல், முனைவர் ரெ.வனிதா, பக்.610
13. தமிழ் மனம், கலித்தொகைக் கால காதல் மரபுகள், முனைவர் இரா.வனிதாமனி பக். 110

துணைநூற்பட்டியல்

References

[1]. திருக்குறள், கோதண்டம், நியு செஞ்சுரி புக்ஹவுஸ், அம்பத்தர், சென்னை, மூன்றாம் பதிப்பு.2012.

[2]. கலித்தொகை மூலமும் உரையும், புலியுர் கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை.முதற்பதிப்பு.2009.

[3]. தமிழர் பண்பாட்டில் விளையாட்டுகள்,சு.பிச்சை, தமிழ்ப் புத்தகாலயம், ராமகாமத்புரம், தியாகராயா நகர், சென்னை.

[4]. பத்துப்பாட்டு பாடலும் பொருளும், (பெரும்பாணாற்றுப்படை) க.த.நீலகண்டன்,சிவசகதி நிலையம், சென்னை.2000

[5]. பத்துப்பாட்டு பாடலும் பொருளும், (மலைபடுகடாம்) க.த.நீலகண்டன்,சிவசக்தி நிலையம், சென்னை.2000

[6]. சிலப்பதிகாரம், புலியுர் கேசிகன், பாரிநிலையம் சென்னை. முதற்பதிப்பு.1958

[7]. புறநானூறு, கு.வெ.பாலசுப்ரமணியம், நியு செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, முதற்பதிபப்பு.2004.

[8]. **தமிழ் மடம் அனைத்துலகத் தமிழ் ஆய்வுஇதழ், முனைவர் மு.வனிதயா,** மே.2026 DOI: https://doi.org/10.63300/tm7052026

[9]. **தமிழ் மடம் அனைத்துலகத் தமிழ் ஆய்வுஇதழ், முனைவர் மு.வனிதயா,** 2025 DOI: https://doi.org/10.63300/tm0403122512

[10]. **தமிழ் மடம் அனைத்துலகத் தமிழ் ஆய்வுஇதழ், முனைவர் இரா.மதிதிலகம்,** அக்டோபர்.2025 https://tamilmanam.in/tirjts/index.php/journal/article/view/33